பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 13

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு தொடர் அச்சுறுத்தலாக அமையும் சிறைச்சாலைகள்



*இலங்கையில் இடம்பெற்ற இன மோதல் சுமார் 30 வருடங்களாக இடம்பெற்று 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் மௌனிக்கப் பட்டது. இவ் யுத்தத்தில் பல இலட்சக்கணக் கான மக்கள் தங்கள் உயிர்களை இழந்தும், சொத்துக்களை இழந்தும் இன்று நிர்க்கதியாகி உள்ள நிலையில், இக்கோர யுத்தத்தால் பல அப்பாவித் தமிழர்கள் அரசியல் கைதிகளாக பயங்கரவாத கொடூர சட்டத்தால் கைது செய்யப்பட்டு...* *(03ஆம் பக்கம் பார்க்க...)*

**கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில் காணாமல் போயுள்ள பொலிஸ் சார்ஜன்ட் சுப்பையா இளங்கோவனை உடனடியாக தேடிக் கண்டுபிடிக்க பொலிஸ் மா அதிபரும், பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் – நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் எம்.இராமச்சந்திரன் வேண்டுகோள்.** **(03 ஆம் பக்கம் பார்க்க...)**





**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நிய மிக்கப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுள்ளார். இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அவர் நேற்று முற்பகல் தனது நியமன கடிதத்தை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.**

**முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகித்த பேராசிரியர் W.D. லக்ஷ்மன் நேற்று முன்தினம் தமது பதவியிலி ருந்து விலகியிருந்தார். இந்நிலையில், மத்திய வங்கியின் புதிய ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார்.**

**நோர்வேயில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில், இலங்கை தமிழரான ஹம்சாயினி குணரட்ணம் பாராளுமன்றத் துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மகிழ்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.** **(03 ஆம் பக்கம் பார்க்க..)**



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## திட்டமிட்டு இழுத்தடிப்புச் செய்யப்பட்டு, வலுவிழப்பு செய்யப்படும் தமிழர் பிரச்சினைகள்

தமிழர் பகுதிகளில் பௌத்த மயமாக்கல். நில அபகரிப்பு. காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கானத் தீர்வுகள். பயங்கரவாதத் தடைச்சட்டம். சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள். வாழ்வாதாரம் என இலங்கையை ஆட்சி செய்த மாறி மாறி வந்த அரசுகளால் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இன்னல்களே இவை. எனினும் எதற்கும் தீர்வுகள் வழங்கப்படாத நிலையில் காலம் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகிறது. சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் தொடர்ந்தும் ஏமாற்றும் கைங்கரிய வேலைகளை அரசுகள் செய்தே வந்தன. அதன் தொடச்சியாக தற்போதைய ஆட்சியாளரும் அவரது 05 வருட பதவிக்காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எதனையும் வழங்குவதற்குத் தயாராகவில்லை. மாறாக தனது பதவிக்காலத்தை இழுத்தடிப்புச் செய்யவே திட்டமிட்டுச் செயற்படுகிறார். வடகிழக்குப் பகுதிகளெங்கும் பார்க்கும் இடமெல்லாம் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு நாட்டினது பாதுகாப்பு என்று கூறப்படுகிறது. முற்றிலும் இராணுவச் செயற்பாடுகளையும் தொடர் கண்காணிப்புக்களையும் தமிழர் பகுதிகளில் அதிகரித்துள்ளனர்.

தொடர் போராட்டங்களால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ள தமிழினம் அடுத்தகட்ட நகர்வு என்ன என்பது பற்றி எதுவும் சிந்தித்துக் கூட பார்க்க முடியாத அளவிற்கு நிலைமைகள் மோசமாகியுள்ளது. சர்வதேச நாடுகள் தான் தீர்வினைப் பெற்றுத்தரும் என நம்பிக்கொண்டிருக்க. உலகில் ஏற்பட்டு வரும் பூகோள அரசியல் மாற்றங்களால் தொடர்ந்தும் தமிழர் பிரச்சினைகள் வலுவிழந்தே வருகின்றன. கால தாமதம் என்பது தமிழினத் தீர்வுக்கு வழிவகுக்காது என்பதே உண்மை.

எனவே தற்போதைய உலக நிலைமையினைக் கருத்திற் கொண்டு. வடகிழக்கில் இருக்கக் கூடிய தமிழ்க் கட்சிகள் இனியாவது அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும். அப்போதுதான் மாற்றங்களை இனி வரும் காலங்களில் எதிர்பார்க்க முடியும். இல்லையேல் எதுவும் சாத்தியமில்லை.

## கருப்பு பூஞ்சை நோய்க்கு உள்ளானவர்கள் இனங்காணப்பட்ட பகுதிகள்

கொவிட் தொற்றாளர்களுள் கருப்பு பூஞ்சை நோய்க்கு உள்ளானவர்கள் கொழும்பு, குருநாகல் மற்றும் இரத்தினபுரி பகுதிகளில் இருந்து இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத் தியர் ஹேமந்த ஹேரத் இவ்வாறு இதனை தெரிவித்துள்ளார்.

கறுப்பு பூஞ்சை என்பது சுற்றாடல் சார்ந்த நோயாகும். இது குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். முகத்தில் அல்லது உடலில் ஏதேனும் வித்தியாசமான பருக்கள் மற்றும் அடையாளங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.



**நாட்டில் மேலும் 132 கொவிட் மரணங்கள் நேற்று (15.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,699 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 2314 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 496,423 ஆக அதிகரித்துள்ளது.**

## பயிலுனர் பட்டதாரிகளுக்கான அறிவித்தல்



பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் தமக்கு வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் ஏதேனும் பிரச்சினை இருக்குமாயின் அதனை உரிய பகுதியினரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 53,000 பட்டதாரிகள் எதிர்வரும் மூன்று மாதங்களில் அரச நிறுவனங்களுக்கு இணைக்கப்பட உள்ளார்கள்.

இந்தப் பட்டதாரிகளுக்கு விரைவில் தொழில் வழங்குவதற்கான பொறுப்பை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சில அமைச்சர்களுக்கு வழங்கியுள்ளார். இவர்களுக்கு தற்சமயம் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் அதுபற்றி கண்டறிந்து உரியவர்களுக்கு நிலுவை தொகையும் வழங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த (14) அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இது பற்றி கருத்து வெளியிட்டார்.

அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்கள் உயர்ந்த பட்ச அளவில் குறைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பது மிக முக்கியமானதாகும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு...

இலங்கையில் உள்ள பல சிறைகளில் பல வருடங்களாக விசாரணை இன்றி நீதி இன்றி விடுதலை இன்றி வாடி வரும் நிலையில் சிறைக் கூடங்களில் பெரும்பான்மைம சிங்களக் கைதிகளாலும் பெரும்பான்மை அரசியல்வாதிகளாலும் உயிர் ஆபத்துக்களை தினமும் சந்தித்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள பல சிறைகளில் 1983ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் அரசியல் கைதிகள் திட்டமிட்ட வகையில் படுகொலைகள் செய்யப்படுவதும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதும் தொடர்கதையாகி உள்ள நிலையில், கடந்த செப்டம்பர் 12ஆம் திகதி சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த அவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளில் இருவரை அழைத்து தன் முன்னால் மண்டியிட வைத்து தனது பாதுகாப்பு கைத்துப்பாக்கியைக் கொண்டு அச்சுறுத்தியுள்ளமையானது மிகவும் ஓர் மோசமான செயலாகும்.

கைதிகளின் நலன் அவர்களின் மறுவாழ்வு பாதுகாப்பு போன்றவற்றிற்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர் இவ்வாறான செயலில் ஈடுபட்டமையானது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயமாகும். இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் அரசியல் கைதிகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குவதுடன் ஓர் இராஜாங்க அமைச்சர் இவ்வாறு செயற்படுவதால் அங்குள்ள ஏனைய பெரும்பான்மை இன சிங்கள கைதிகள் எல்லை மீறி செயற்பட்டு தமிழ் கைதிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுவதற்கு இச் சம்பவம் ஏதுவாக அமைந்துவிடும். எனினும் இச்சம்பவத்தின் பின்னரான அழுத்தம் காரணமாக குறித்த அமைச்சர் பதவியிலிருந்து விலகியுமுள்ளார். நாடு முழுவதும் இருந்து இச்சம்பவத்திற்கு கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ஐ.நா கூட்டத்தொடர் நடந்துவரும் நிலையில் அரசின் அராஜகப்போக்கினை மீண்டும் இச்சம்பவம் வெளிக்காட்டியிருக்கிறது. இலங்கையில் இன்னமும் மனித உரிமைகளை மீறுகின்ற சம்பவம் அரச தரப்பினரால் கைவிடப்படவில்லை என்பதற்கு இந்த சம்பவமே போதுமானது.

இதனை ஓர் விடயமாக கருதாமல் அரசுடன் கைகோர்த்து உறவாடிவரும் தமிழ் அரசியல் தலைமைகளும், தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் எனக்கூறிக்கொண்டு, தேசியம், சுயநிர்ணயம் என பரபரப்பு அரசியல் செய்யும் தமிழ்க் கட்சிகளும் உடனடியாக இதற்கு சரியான நடவடிக்கையை அரசு எடுக்க அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதுடன் வெறுமனவே ஊடகங்களுக்கு வெட்டிப்பேச்சு பேசி வீராப்பு வேசங்கள் போடாமல் காத்திரமான செயலில் ஈடுபடவேண்டும் என சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் அவர்களின் உறவுகள் சார்பில் நாம் கேட்டு நிற்கின்றோம்.

## நோர்வேயில் ஹம்சாயினி...

இதன்போது தொழிற்கட்சியின் ஒஸ்லோ இளைஞரணியில் இணைந்த அவர் அதன் தலைவியாகவும் பதவி வகித்தவர். 19 வயதில் (2007) ஒஸ்லோ மாநகரசபையின் பிரதிநிதியாகப் பெரும் ஆதரவுடன் தெரிவான அவர், 2015முதல் ஒஸ்லோ மாநகரசபையின் துணை முதல்வராகப் பதவி வகிக்கிறார். அத்துடன் நோர்வேயின் மிகப்பெரிய கட்சியான தொழிற்கட்சி, தலைநகர் ஒஸ்லோவில் நிறுத்திய வேட்பாளர்களில், பிரதமர் பதவிக்கான வேட்பாளர் யூனாஸ் கார் ஸ்ரூரவுக்கு அடுத்த இடத்தில் ஹம்சியை நிறுத்தியதன் மூலம் அவரது நாடாளுமன்றப் பதவியை உறுதி செய்திருந்தது.

இந்நிலையில் அவருக்கு பலரும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறிவருகின்றனர். இதேவேளை முழுநேர அரசியல்வாதியாக நோர்வே தமிழர்கள் மத்தியில் இருந்து ஹம்ஸி மாத்திரமே உருவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போன சார்ஜன்ட்...

நுவரெலியா மாவட்டம் பூண்டுலோயாவை சேர்ந்த 56 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் சுப்பையா இளங்கோவன் திடீர் சுகயீனம் காரணமாக கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 08 ஆம் திகதி காலை அனுமதிக்கப்பட்டார். எனினும் அன்றைய தினமே வைத்தியசாலையிலிருந்து காணாமல் போயுள்ளதாக வைத்தியசாலையிலிருந்து உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் குடும்பத்தினரின் முறைப்பாட்டுக்கு அமைய கம்பளை மற்றும் கொத்மலை பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ள போதிலும் இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை.

இவ்வாறான நிலையில், 33 வருடமாக பொலிஸ் சேவையில் ஈடுபட்டு வரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான இளங்கோவன் கம்பளை மாவட்ட வைத்தியசாலையிலிருந்து கடந்த 08 ஆம் திகதி காணாமல் போய் இன்றோடு எட்டு நாட்களா கியும் அவர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. காணாமல் போன பொலிஸ் அதிகாரிக்கான முழு பொறுப்பையும் கம்பளை வைத்தியசாலையே ஏற்கவேண்டும். மேலும் காணாமல் போன பொலிஸ் சார்ஜன்ட் இளங்கோவனை விரைவாக தேடி கண்டுபிடித்து குடும்பத்தாரிடம் ஒப்படைக்க இலங்கை பொலிஸ் மா அதிபரும், பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பிரதேசபை உறுப்பினர் இராமச்சந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

## இன்னும் தூரப்பட முடியாத கனவுகள்!



அன்றொரு வெள்ளிக்கிழமை. இதே தினத்தில் 2007ஆம் ஆண்டில் மிகுந்த சோகத்துடன் விடிந்த சம்மாந்துறை என்றும் காணாத கலவரத்தினை அடைந்திருந்தது. எல்லோர் முகத்திலும் சோகம் அப்பியிருந்தது. வரலாறு காணாத சனக்கூட்டம் நகர மண்டபத்தை சூழ்ந்திருந்தது. தங்களை அறியா மலேயே மக்கள் வரிசையாக நிற்கத் தொடங்கினர். அந்தப் புகழுடம்பைப் பார்ப்பதில் வெறியாக நின்றனர். பலரின் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவர்கள் எல்லோரையும் ஆகர்சித்த அன்வர் இஸ்மாயிலின் புன்னகை அன்றுடன் விடைபெறத் தொடங்கியது.

அரசியல் வரலாற்றில் மிகக்குறுகிய காலம் ஆட்சி செலுத்தினா லும் ஒரு நீண்ட வரலாறும் பாரிய பணிகளும் அவர் பின்னாலே இருந்தன. 1956இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது நாடெங்கும் தமிழரசுக் கட்சியினால் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டபோது கல்லெறிகள் வாங்கிய இஸ்மாயில் என்ற தந்தையின் மகன் தான் அன்வர் இஸ்மா யில். சிறிய வயதில் இருந்து சமூகப் பணிகளில் அக்கறை செலுத்தி அரசியல் மேடைகளில் பங்குபற்றி ஆர்வத்துடன் இயங்கியவர். இலங்கையில் இஸ்ரேலியத் தூதரகம் திறப்பதற்கான முஸ்தீபுகள் இடம்பெற்ற போது அதற்கு எதிராக செயற்பட்டதனால் அரசினால் கைது செய்யப்பட்டவர். அக்காலத்து இளைஞர்கள் பலரை தமிழர் விடுதலை இயக்கங்கள் கவர்ந்திருந்தன. முஸ்லிம் இளைஞர்கள் பலர் அதில் அள்ளுண்டு போகக் கூடிய சூழ்நிலை இருந்தது. சில இளைஞர்கள் தமிழர் இயக்கங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இக்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் என்ற முகாம் அவர்களில் பலரை மீட்டெடுத்தது. முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்தில் இந்தப் பின்னணியும் இருந்தது. 1990களில் அஷ்ரப் பிரகடனப்படுத்திய 'கறுப்பு வெள்ளி'ப் போராட்டத்தில் அன்வர் இஸ்மாயில் முக்கிய பங்கெடுத்தார். அரசியல் ரீதியாக பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்த அவர் இளைஞர்கள் மத்தியில் கவர்ச்சிகரமான பாத்திரமானார். இந்தக் கவர்ச்சி அவருக்கு மக்களின் பிரதிநிதியாக ஆகும் சந்தர்ப்பத்தினைக் கொடுத்தது. 2001இல் திகாமடுல்ல மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராாளுமன்ற உறுப்பினராக அவர் தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில் அரசியல் ரீதியான முக்கிய தீர்மானங்களை அவர் மேற்கொண்டார்.

ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக அவர் இருந்தார். 2004இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முக்கிய பங்காளராக அவர் மாறினார். அக்கூட்டமைப்பின் கிழக்கு மாகாண உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற அவர் பின்னர் தேசிய பட்டியலில் நியமிக்கப்பட்டு நீர்ப்பாசன அமைச்சராகக் கடமையாற்றினார். இவற்றுக்குப் பின்னால் அவரது அரசியல் சாணக்கியம் அதிகம் நிறைந்திருந்தது. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மங்கள சமரவீர முதலான அரசியல் தலைவர்களுடன் அவருக்கு மிக நெருக்கமான பழக்கம் இருந்தது. அவர்களது அரசியல் சிந்தனைகளாலும் அவர் அதிகம் ஈர்க்கப்பட்டிருந்தார். அவர் நெருக்கமாகப் பழகிய நல்ல அரசியல் தலைவர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மங்கள சமரவீர ஆகியோரையும் நாம் இழந்து விட்டோம். அவரது மறைவுக்குப் பின்னர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயை நான் சந்தித்த போது அன்வர் இஸ்மாயிலின் அரிய குணங்களை அவர் மிகவும் சிலாகித்து பேசினார். இந்த நாட்டில் நமக்காக எஞ்சியிருந்த ஒரே சக்தியையும் நாம் இழந்து விட்டோம் என்ற மனப்பாங்கை நமக்குத்தந்த மங்கள சமரவீரவின் இழப்பும் நமது நம்பிக்கைகள் எல்லாவற்றையும் குலைத்துவிட்டது.

இப்படித்தான் இழப்புக்கள் சிலவேளைகளில் மிகப்பயங்கரமாக அமைந்துவிடுவதுண்டு. அவை நிரப்ப முடியாததாக மாறிவிடுவதுண்டு. சில இழப்புக்கள் தேசிய ரீதியாக நமக்கு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சில பிரதேச மட்டத்தில் நிரப்ப முடியாததாக அமைந்துவிடுகின்றன. சம்மாந்துறை பிரதேசமே அன்வர் இஸ்மாயிலின் கனவாக இருந்தது. அந்த ஊரின் எதிர்காலம் குறித்து அவர் மிகுந்த அக்கறைப்பட்டிருந்தார். இங்குள்ள அரிய வளங்களை ஆற்றலுடன் பயன்படுத்த அவர் விரும்பியிருந்தார். அந்த ஊரினை திட்டமிடவும் செயற்படுத்தவும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் மரணித்து பதினான்கு வருடங்கள் கடந்துவிட்டன. இத்தனை காலத்துக்குள்ளும் எத்தனை குழந்தைகள் இந்த மண்ணில் பிறந்திருக்கும். ஆனால் அவரது காலத்துக்குப் பின்னர் இங்கு ஆரம்பப் பாடசாலைகள் கூட உருவாகவில்லை. அதனைப் புரிந்து கொள்வதற்கும் யாருமில்லை. இப்படிப் பல பிரச்சினைகள் இங்கிருக்கின்றன. புதுப்புது பல ஆளுமைகள் உருவாகியிருக்கின்றனர். அவர்களுடன் பேசவும் பகிரவும் பல உண்டு. அவர்களைப் பாராட்டி மகிழ வேண்டும். இப்படியெல்லாம் சிந்திக்கவும் செயற்படவும் ஆளுமையுள்ள மக்கள் பிரதிநிதி அவர். அவர் போல ஆற்ற வேண்டிய கருமங்கள் பல உள. அவற்றை செய்வதற்கு நாம் தயாராக வேண்டும். ஆகவேதான் இந்தக்கட்டத்தில் இந்த ஊரைத் திட்டமிட வேண்டிய பொறுப்பு சிவில் சமூகத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் உண்டு. இன்னும் இவற்றினை தூரப்படுத்த முடியாது. அவர் மரணித்த இந்தத் தினத்தில் அவர் கனவுகளை சிறைப்படுத்தி நனவாக்க நாம் தயாராகுவோம்.

முதுநிலை பேராசிரியர் றமீஸ் அப்துல்லா – தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில்.

# முதல் நீர்மூழ்கி ஏவுகணையை சோதித்தது தென்கொரியா



வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்தது. அதேவேளையில் தென்கொரியா தனது முதல் நீர்மூழ்கி ஏவுகணையை சோதித்தது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவுகிறது. ஐ.நா. சபையின் தீர்மானங்களை மீறியும் சர்வதேச நாடுகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வட கொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் அணு ஆயுதங்களையும் சோதித்து உலகை அதிரவைத்து வந்தது. இந்த விவகாரத்தில் வடகொரியா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள அமெரிக்கா கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பிரதேசமாக மாற்ற வேண்டும் என்பதில் தீர்மானமாக உள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா வட கொரியாவுடன் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஆனால் எந்தவித உடன்பாடும் எட்டப்படாமல் இந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன. இதனால் வடகொரியா அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான ஜப்பான் மற்றும் தென்கொரியாவை அச்சுறுத்தும் வகையில் அவ்வப்போது ஏவுகணைகளை ஏவி சோதித்து வருகிறது. அந்த வகையில் கடந்த வார இறுதியில் புதிய தொலைதூர ஏவுகணையை அடுத்தடுத்து 2 முறை சோதித்ததாக வடகொரியா தெரிவித்தது. வடகொரியாவின் இந்த நடவடிக்கை அண்டை நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளதாக கூறி அமெரிக்கா. தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

ஜப்பான் வரை சென்று தாக்கக்கூடிய ஏவுகணையை பரிசோதனை செய்த இரண்டே நாட்களில் வடகொரியா மீண்டும் கண்டம் விட்டு கண்டம் பாயும் 2 ஏவுகணைகளை சோதித்து உலகை அதிர வைத்துள்ளது. வடகொரியாவின் மத்திய பகுதியில் இருந்து ஜப்பான் கடலை நோக்கி ஏவப்பட்ட இந்த ஏவுகணைகள் சுமார் 60 கி.மீ. உயரத்தில் 800 கி.மீ. தொலைவு வரை பறந்து சென்றதாக தென்கொரியா ராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த ஏவுகணைகள் கொரிய தீபகற்பத்துக்கும் ஜப்பானுக்கும் இடையில் கடலில் விழுந்து நொறுங்கியதாகவும் தென்கொரிய ராணுவம் தெரிவித்தது. எனினும் இந்த ஏவுகணை சோதனையால் அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் உடனடியாக எந்த அச்சுறுத்தலும் இல்லை என அமெரிக்கா கூறியுள்ளது. அதேவேளையில் வடகொரியாவை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்தது பிராந்திய அமைதிக்கு அச்சுறுத்தலை விளைவிக்கும் மூர்க்கத்தனமான செயல் என ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அதேபோல் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் எந்த ஒரு பதில் நடவடிக்கைக்கும் முழுமையாக தயார் நிலையில் இருப்பதாகவும் தென் கொரியா தெரிவித்துள்ளது. இதனிடையே வட கொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்ததாக தகவல் வெளியான சில மணி நேரத்துக்கு பின் தென் கொரியா தனது முதல் நீர்மூழ்கி ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்தது. முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த நீர்மூழ்கி ஏவுகணையின் சோதனை பிற்பகல் நடந்ததாகவும் இதை அதிபர் மூன் ஜே இன் நேரில் பார்வையிட்டதாகவும் தென்கொரிய அரசு தெரிவித்தது. 3 ஆயிரம் டன் எடையுள்ள நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை துல்லியமாக தாக்கி அழித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## தலிபான்கள் ஆட்சியில் நேர்ந்த நிதி நெருக்கடி

ஆப்கானை தலிபன்கள் கைப்பற்றி ஆட்சி அமைத்த இந்த ஒரு மாத காலத்தில் அங்கு கடும் நிதி நெருக்கடியும், பணத் தட்டுப்பாடும் ஏற்பட்டு அரசு நிலைகுலையும் நிலைக்கு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆப்கானுக்கு வழங்கி வந்த நிதியுதவியை உலக வங்கி, சர்வதேச நிதியம் மற்றும் சர்வதேச நாடுகள் நிறுத்திவிட்டன. அத்துடன் பணத்தட்டுப்பாடு காரணமாக வங்கிகளில் இருந்து பணம் எடுக்கும் வரம்பு 200 டொலராக குறைக்கப்பட்டதும் ஆப்கானியர்களை நெருக்கடியில் தள்ளியுள்ளது.

இதனால் பொருளாதாரம் வீழ்ந்து விலைவாசி உயர்ந்துள்ளது. பெரும்பாலான தலிபான் படையினருக்கு பண உதவி கிடைக்காமல் அவர்கள் கிடைத்ததை தின்றுவிட்டு சாலை ஒர டிரக்குகளில் தங்கி உள்ளதாக கூறப்படுகிறது. 40 லட்சம் ஆப்கானியர்கள் உணவு இல்லாமல் பட்டினி கிடக்கின்றனர். பட்டினியால் அதிக எண்ணிக்கையில் மரணங்கள் ஏற்படுவதாகவும் சொல்லப்படுகிறது.



## பிரான்ஸில் புதிய கட்டுப்பாடுகள்



பிரான்ஸ் நாட்டில் சுகாதாரம் மற்றும் பராமரிப்பு இல்ல பணியாளர்களுக்கு கட்டாயம் தடுப்பூசி செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பிரான்சில் கொரோனாவின் அடுத்த அலை பரவுவதை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பொருளாதார பாதிப்பிலிருந்து தற்போது தான் நாடு மீண்டு வருகிறது. இந்நிலையில், அடுத்த அலை பரவினால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதன்படி, சுகாதாரம் மற்றும் பராமரிப்பு இல்லத்தின் அனைத்து ஊழியர்களும், உதவியாளர்களும், அவசர பராமரிப்பு தொழில்நுட்ப வல்லுநர்களும் குறைந்தது முதல் தவணை தடுப்பூசியாவது, செலுத்தியிருக்கவேண்டும். மேலும், தற்போது வரை, சுகாதார நிறுவனங்கள் மற்றும் பராமரிப்பு இல்லங்களை சேர்ந்த பணியாளர்கள் சுமார் 84% பேர் இரண்டு தவணை தடுப்பூசிகளையும் செலுத்தியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.